# தேநீர்க் கடையில் தொடங்கிய பயணம்: 90 வயதிலும் சாதனையின் சிகரத்தில் தொழிலதிபர் வி.ஜி.சந்தோசம்!

ஆர் முத்துக்குமார்

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." — திருக்குறள் (505)

ஒரு மனிதனின் உயர்வை நிர்ணயிப்பது அவரது செல்வமோ, பதவியோ அல்ல; அவர் ஆற்றிய செயல்களே. அந்த வகையில், தனது செயல்களால் தலைமுறைகள் போற்றும் இடத்தைப் பெற்றவர் வி.ஜி.பி. குழுமத் தலைவர் டாக்டர் வி.ஜி. சந்தோசம்.

90வது அகவையில் அடியெடுத்து வைக்கும் இந்த இனிய தருணத்தில், அவருக்கு மக்கள் குரல் இதழ் தனது இதயங்கனிந்த பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தொண்ணூறு என்பது ஒரு எண்ணிக்கை மட்டுமல்ல; அனுபவத்தின் உச்சம், சாதனையின் சிகரம், சமூகத்திற்காக வாழ்ந்த வாழ்க்கையின் முத்திரை. ஒன்பது தசாப்தங்களை நிறைவு செய்தவர், இன்னும் இளைஞரின் உற்சாகத்தோடும், புதிய சிந்தனைகளோடும் செயல்பட்டு வருவது அவரது தனிச்சிறப்பு.

வணிக உலகில் வெற்றியின் புதிய எல்லைகளைத் தொட்டதோடு, தொழில்துறை வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் அவர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. ஒரு சாதாரண முயற்சியை உலகம் அறியும் நிறுவனமாக வளர்த்த அவரது தொலைநோக்கு பார்வை, தொழில் முனைவோருக்கு என்றும் ஒரு பாடமாகும்.

### விடா முயற்சிக்கு எடுத்துக்காட்டு:

சைதாப்பேட்டையில் சிறிய தேநீர்க்கடையில் தொடங்கிய வாழ்க்கைப் பயணம்... இன்று தொழில், சமூக சேவை, தமிழ் வளர்ச்சி என பல துறைகளில் தடம் பதித்திருக்கிறது. 90 வயதை எட்டியுள்ள அண்ணாச்சி வி.ஜி. சந்தோசத்தின் வாழ்க்கை, கடின உழைப்புக்கும் விடாமுயற்சிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

1936 ஆகஸ்ட் 15ஆம் தேதி பிறந்த வி.ஜி. சந்தோசம், தனது மூத்த சகோதரர் வி.ஜி. பன்னீர்தாஸுடன் நெல்லையிலிருந்து சென்னைக்கு வந்தார். வறுமை அவர்களின் வாழ்க்கையில் பல சவால்களை ஏற்படுத்தியது. ஆனால் அந்த சவால்களைத் தடையாகப் பார்க்காமல், முன்னேறுவதற்கான வாய்ப்பாக மாற்றிக் கொண்டனர்.

சைதாப்பேட்டையில் சிறிய தேநீர்க்கடையைத் தொடங்கினர். அதிகாலை 4 மணிக்கே எழுந்து கடையை கவனிப்பதுடன், தினத்தந்தி அலுவலகத்துக்குச் சென்று நாளிதழ்களை வாங்கி சைக்கிளில் வீடு வீடாக விநியோகம் செய்தார் சந்தோசம்.

மக்களின் அன்பும் நம்பிக்கையும் அவர்களின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது. பின்னர் மளிகைக் கடையையும் தொடங்கினர். லாபத்தை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், மக்களின் தேவைகளைப் புரிந்து செயல்பட்டதே அவர்களின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

### உலகப் பார்வை:

புதிய விஷயங்களை கவனித்து, அதிலிருந்து புதிய வாய்ப்புகளை உருவாக்கும் திறன் வி.ஜி. சந்தோசத்தின் தனிச்சிறப்பாக இருந்தது. 1970களில் அமெரிக்காவுக்குச் சென்றபோது அங்குள்ள பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் வணிக வளர்ச்சிகளை அவர் உன்னிப்பாகக் கவனித்தார். அந்த அனுபவங்கள் பின்னர் வி.ஜி.பி. பொழுதுபோக்கு பூங்கா உருவாகும் எண்ணத்துக்கு வழிவகுத்தன. கிழக்குக் கடற்கரைச் சாலையில் பெரிய நிலப்பரப்பை வாங்கி, அதன் ஒரு பகுதியில் முக்கியமான பொழுதுபோக்கு மையத்தை உருவாக்கினர்.

தொழிலுடன் தமிழ் சேவையும்

தொழில் வெற்றியுடன் தனது பயணத்தை நிறுத்திக் கொள்ளாதவர் வி.ஜி. சந்தோசம். தமிழ் மொழி மற்றும் கலாசார வளர்ச்சியிலும் தொடர்ந்து பங்காற்றி வருகிறார். 1993 ஆம் ஆண்டு 'வி.ஜி.பி. உலகத் தமிழ்ச் சங்கம்' அமைப்பைத் தொடங்கினார்.



கவியரங்குகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட பல்வேறு தமிழ் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். திருக்குறள் மாநாடுகளையும் நடத்தி, உலகின் பல்வேறு நாடுகளில் திருவள்ளுவர் சிலைகள் அமைக்கவும் பங்களித்துள்ளார்.

வறுமை வாழ்க்கையின் முடிவு அல்ல என்பதையும் தனது வாழ்க்கையின் மூலம் நிரூபித்துள்ளார். வறுமையில் வாடுபவர்களுக்கு நம்பிக்கையூட்டி, கடின உழைப்பால் சாதிக்க முடியும் என்ற எண்ணத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

90 வயதிலும் சுறுசுறுப்பு:

90 வயதிலும் அவரது வாழ்க்கை முறை ஒழுக்கத்துடன் தொடர்கிறது. அதிகாலையில் எழுதல், உடற்பயிற்சி, நாளிதழ் வாசிப்பு, அலுவலகப் பணி, குடும்பத்தினருடன் நேரம் செலவிடுதல் என அவரது அன்றாட நடவடிக்கைகள் தொடர்கின்றன.

தினமும் குறைந்தது 4 பேருக்காவது உதவ வேண்டும் என்பதையும் தனது வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ளார். வேலை தேடி வருபவர்களுக்கு ஆலோசனையும் வழங்குகிறார். சிறிய தேநீர்க்கடை, நாளிதழ் விநியோகம் என தொடங்கிய வாழ்க்கை, தொழில் சாதனை, சமூக சேவை, தமிழ் வளர்ச்சி என பல்வேறு தளங்களில் உயர்ந்துள்ளது.

90 வயதிலும் அவரது வாழ்க்கை சொல்லும் பாடம், கடினமாக உழைக்க வேண்டும்; நல்லதைச் சிந்திக்க வேண்டும்; மற்றவர்களுக்கு உதவ வேண்டும்.

## நீண்ட ஆயுளுக்கான அண்ணாச்சியின் வழிமுறை

"சுறுசுறுப்பாக இருங்கள்... நல்லதைச் சிந்தியுங்கள்... மற்றவர்களுக்கு உதவுங்கள்!"

90 வயதிலும் சுறுசுறுப்பாக செயல்பட்டு வரும் அண்ணாச்சி வி.ஜி. சந்தோசத்தின் அன்றாட வாழ்க்கை முறையில் ஒழுக்கமும் நேரக் கட்டுப்பாடும் முக்கிய இடம் பெறுகின்றன. அவரது தினசரி பழக்கங்கள் .....

நீண்ட ஆயுளின் ரகசியம்?

**அதிகாலை 5 மணிக்கு எழுதல்**

அலாரம் இல்லாமலேயே அதிகாலையில் எழுந்து கொள்கிறார்.

தினமும் உடற்பயிற்சி

எளிய உடற்பயிற்சிகளை தொடர்ந்து செய்து வருகிறார்.

**நாளிதழ் வாசிப்பு**

நாட்டின் நடப்புகளை அறிந்து கொள்ள தினமும் நாளிதழ்களைப் படிக்கிறார்.

**காலை அலுவலகப் பணி**

மிடுக்கான உடையில் காலை 10 மணிக்கே அலுவலகத்துக்குச் செல்கிறார்.

**பிரார்த்தனையுடன் தொடக்கம்**

தாயார் சந்தனம்மாளை வணங்கி பணிகளைத் தொடங்குகிறார்.

**எளிய உணவு**

காலையில் எளிமையான உணவை எடுத்துக் கொள்கிறார்.

**காபிக்கு நேரம்**

காலை 11 மணியளவில் ஒரு கப் காபி அருந்துகிறார்.

**அனைவரையும் மதித்தல்**

தன்னைச் சந்திப்பவர்களிடம் மரியாதையுடனும் அன்புடனும் பழகுகிறார்.

**தினமும் உதவி**

குறைந்தது நான்கு பேருக்காவது உதவ வேண்டும் என்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

வேலை தேடுபவர்களுக்கு ஆலோசனை

வேலை தேடி வருபவர்களுக்கு தினமும் ஆலோசனை வழங்குகிறார்.

சிரிப்புடன் பேசுதல்

கோபமாக இருப்பவர்களையும் சிரிக்க வைக்கும் வகையில் பேசுவது அவரது தனிச்சிறப்பு.

**குடும்பத்துடன் நேரம்**

குடும்பத்தினருடன் தினமும் கலந்துரையாடுகிறார்.

**இரவு 10 மணிக்குள் தூக்கம்**

நேரத்துக்கு தூங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

நல்லதைச் சிந்திப்பது... நல்லதைச் செய்வது!

வி.ஜி. சந்தோசத்தின் வாழ்க்கை முறை, நீண்ட ஆயுள் என்பது வயதை அதிகரிப்பது மட்டுமல்ல; உடலையும் மனதையும் சுறுசுறுப்பாக வைத்துக் கொண்டு, மற்றவர்களுக்கும் பயனுள்ளதாக வாழ்வதே என்பதைக் காட்டுகிறது.

# செங்கல்பட்டு அங்காள பரமேஸ்வரி கோவில்: மனித உருவில் வந்த சிவன், காலடிபட்ட தலம்...!



செங்கல்பட்டு மாவட்டம் திருநிலை என்ற கிராத்தில் அமைந்துள்ளது, அங்காள பரமேஸ் வரி உடனுறை பெரியாண்டவர் கோவில். சிவபெருமான் மனித வடிவில் வந்ததால், அவர் காலடிகள் நேரடியாகப்பட்ட தலம் இதுவாகும். இங்கு வந்து வழிபட்டால் குழந்தை பேறு கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

அசுரர்கள், தங்கள் தவ பலத்தால் பல்வேறு வரங்களைப் பெற்று, அனைவருக்கும் இன்னல்கள் விளை விப்பது தொடர்கதையாகி வந்தது. இந்நிலையில், அத்தகைய அசுரர்களை அழிக்க வேண்டிய சூழல் ஈசனுக்கு வந்தது. அசுரர்களின் வரத்தின் காரண மாக, ஈசன் ஒரு நாழிகைப் பொழுது மனிதனாக வாழ்ந்தால்தான் அவர்களை அழிக்க முடியும் என்னும் நிலை இருந்தது. அதன் காரணமாக சிவ பெருமான் பூமிக்கு வந்தார்.

இதனால் அனைத்து இயக்கங்களும் தடைப்பட்டன. தேவர்கள் மனம் கலங்கினர். அவர்கள் அனை வரும் பார்வதி தேவியிடம் சென்று, ஈசனை ஆட் கொண்டு உலகை காப்பாற்ற வேண்டும் என்று வணங்கி நின்றனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்ற பார்வதி தேவி, அங்காள பரமேஸ்வரியாக பூவுலகம் வந்து, சிவனைக் கண்டார். பின், தன் சூலாயுதத்தை ஓரிடத்தில் வீசி எறிந்தார். பூமியில் பதிந்த அந்த சூலாயுதத்தில் இருந்து ஒரு தெய்வீக ஒளி தோன்றியது. உடனே, அங்கே சிவபெருமான் வந்து, தன் பாதங்களை ஒரு நிலையாகப் பதித்து திருநிலையாய் நின்றார். இதைப் பார்த்து பரமேஸ் வரி அவரை வணங்கினார்.

அப்போது ஒரு நாழிகைப் பொழுது நிறைவுற, சிவபெருமான் மனித உருவம் நீங்கி தன்நிலை அடைந்தார். "பெரிய மனிதராய் உலகை வலம் வந்த ஆண்டவராகிய நீவிர் பெரியாண்டவர் என்னும் பெயரில் வழங்கப் பெறுவீர்கள்" என்று உமாதேவி கூற, தேவர்கள் அனைவரும் 'பெரியாண்டவரே' என்று சொல்லி ஈசனின் பாதங்களைப் பணிந்தனர். அங்கேயே சிவபெருமான் சுயம்பு லிங்கமாக எழுந்தருளினார். இத்தகைய நிகழ்ச்சி நடந்த திருத்தலம்தான் திருநிலை.

சிவபெருமான் மனித வடிவில் உலகை வலம் வந்தபோது, அவருடன் 21 சிவகணங்களும் எவர் கண்ணிலும் படாமல் மறைந்து சென்றன. அங்காள பரமேஸ்வரி சூலாயுதத்தை எறிந்தபோது, மண்ணில் மறைந்திருந்த சிவகணங்கள் மண் கட்டிகளாக சிதறி விழுந்தன. பின்னர் ஈசன் சுய வடிவை அடைந்ததும், அவையும் சிவகணங்களாக வெளிப்பட்டன. இதைக் குறிக்கும் வண்ணம் இங்கே 21 சிவகணங்களும் லிங்க வடிவில் உள்ளன.

சிவனுடன், நந்தியும் மனித வடிவில் சென்றது. எனவே இங்குள்ள நந்தி, மனித உடலுடன் காணப்படுகிறது. இங்குள்ள விநாயகரும் இரண்டு கரங்களோடு மனித உடலுடன் காட்சி தருகிறார். இவருக்கு திருநீறு அபிஷேகம் மட்டுமே செய்யப் படுகிறது. இந்தத் திருநீற்றைப் பூசி, உட்கொள்வதால், நோய் நீங்குவதாகவும், கல்வி, செல்வம் கிட்டுவதாகவும் பக்தர்கள் கூறுகின்றனர். பல சித்தர்களும், முனிவர்களும் கண்ணுக்குப் புலப்படாமல் இந்த சிவபெரு மானை வணங்கிச் செல்வதாகவும் நம்பப்படுகிறது. மூலவரான பெரி யாண்டவரை லிங்க வடிவில் உள்ள 21 சிவகணங்கள் தினமும் பூஜிப்பதாக ஐதீகம்.

மனித வடிவில் பெரியாண்டவர் இவ்வாலயத்தின் அருகிலுள்ள சித்தாமிர்த குளத்தில் குளித்து விட்டு, சிவபெருமானையும், அம்ம னையும் தொடர்ந்து ஆறு வாரங் கள் வணங்கி வந்தால் நினைத்த காரியங்கள் நடைபெறும் என்கின் றனர். மகப்பேறு கிடைக்க வழிபட வேண்டிய பிரார்த்தனை தலமாக வும் இது விளங்குகிறது. பல்லாயி ரக்கணக்கானோர் இந்த சிவனை குலதெய்வமாக வணங்கி வருகின்றனர். அவர்கள், சிவலிங்கத்தை சுற்றி 21 மண் உருண்டைகளை வைத்து வணங்கிச் செல்கின்றனர். செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் இருந்து சுமார் 7 கிலோமீட்டர் தொலை வில் அமைந்துள்ளது, திருநிலை அங்காள பரமேஸ்வரி கோவில்.

**உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில் வந்திங்கு**
**எமையும் தமக்கன்பு செய்ய வைத்தார்**
**இனி எண்ணுதற்குச்**
**சமையங்களும் இல்லை**
**ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை**
**அமையும் அமையுறு தோழியர் மேல்**
**வைத்த ஆசையுமே**


**INDOWIND ENERGY LIMITED**

CIN: L40108TN1995PLC032311

REGD Office: "Kothari Buildings" 4th Floor, 114, M.G.Road, Nungambakkam, Chennai- 600 034. Tel: 044-28331310 Email: contact@indowind.com

**EXTRACT OF STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30-06-2026** (Rs. In Lakhs)

| Particulars | Consolidated - Quarter ended 30-06-2026 (Un-Audited) | Quarter ended 31-03-2026 (Audited) | Quarter ended 30-06-2025 (Un-Audited) | Year ended 31-03-2026 (Audited) |
|---|---|---|---|---|
| Total income from operations (Gross) | 843.58 | 526.78 | 1155.15 | 4075.43 |
| Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary Items) | 179.49 | -348.63 | 251.88 | 379.31 |
| Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and Extraordinary Items) | 179.49 | -593.08 | 251.88 | 134.86 |
| Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary Items) | 210.61 | -750.60 | 257.69 | 0.58 |
| Total Comprehensive Income for the period (Comprising Profit/Loss for the period (after tax) and other comprehensive Income (after tax)) | 199.38 | -749.90 | 229.45 | -3.95 |
| Paid up Equity Share Capital of Rs.10/- each | 16100.22 | 16100.22 | 12880.17 | 16100.22 |
| Reserves (excluding Revaluation Reserve) | - | 14478.74 | - | 14478.74 |
| Earnings Per Share (of `Rs.10/- each) (for continuing and discontinued operations) | | | | |
| Basic (in Rs.): | 0.13 | -0.47 | 0.20 | 0.00 |
| Diluted (in Rs.): | 0.13 | -0.47 | 0.20 | 0.00 |

Note: 1. Additional information on Standalone Financial Results pursuant to Reg. 47 of SEBI (LODR) Regulations (Rs. In Lakhs)

| Particulars | Standalone - Quarter ended 30-06-2026 (Un-Audited) | Quarter ended 31-03-2026 (Audited) | Quarter ended 30-06-2025 (Un-Audited) | Year ended 31-03-2026 (Audited) |
|---|---|---|---|---|
| Total income from Operations | 695.05 | 545.44 | 940.88 | 3188.89 |
| Profit / (Loss) Before Tax | 166.09 | -434.23 | 186.30 | 169.64 |
| Profit / (Loss) After Tax | 156.57 | -630.49 | 192.11 | 26.62 |
| Total Comprehensive Income | 156.57 | -634.49 | 192.11 | 22.62 |

2. The above is an extract of the detailed format of financial results for the quarter ended on 30th June 2026 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full formats of the Standalone and Consolidated Financial Results were reviewed by the Audit Committee and approved by the Board of Directors of the Company at their Meetings held on 13th August, 2026 and the same are available on the Stock Exchange websites. **(www.bseindia.com / www.nseindia.com)** and Company's Website **www.indowind.com**

Place : Chennai
Date : 13th August, 2026

For **INDOWIND ENERGY LIMITED**
Sd./-
N K Haribabu
Whole-Time Director & CFO


# சூர்யாவின் குடும்பப் பாசம்: மனதைத் தொடும்...!

## ஆரோக்கிய — அழகான சித்திரம்

*சூர்யா நடிப்பில் வெங்கி அட்லூரி இயக்கியுள்ள 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்' திரைப்படம் இன்று வெளியாகியுள்ள நிலையில், முதல் நாள் ரசிகர்கள் மற்றும் சமூக வலைதளப் பார்வையாளர்களிடமிருந்து இதுவரை நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.*

*சமீபத்திய படங்களில் ஆக்ஷன் கதாபாத்திரங்களில் அதிகம் பார்த்த சூர்யாவை, இந்தப் படத்தில் குடும்ப உணர்வுகள், காதல், உறவுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட கதாபாத்திரத்தில் பார்க்க முடிகிறது.*

*சூர்யாவின் நடிப்பே படத்தின் மிகப்பெரிய பலம் என்று ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.*

*குறிப்பாக உணர்ச்சிகரமான காட்சிகளில் அவரது கட்டுப்படுத்தப்பட்ட நடிப்பும், கதாபாத்திரத்தின் முதிர்ச்சியான அணுகுமுறையும் பாராட்டப்படுகிறது.*

*நாயகி மமிதா பைஜு: அவரது இயல்பான துடிப்பான நடிப்பு, சூர்யாவுடன் நெருக்கம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.*

*இயக்குநர் வெங்கி அட்லூரியின் முக்கிய வெற்றி குடும்ப உணர்வுகளை அழுத்தமாக பதிவு செய்திருப்பது தான் முதல் பாதி ஓகே. கிளைமாக்ஸ் ஓஹோ...!*

*படம் முழுக்க 'அதிரடி' ஆக்ஷனை எதிர்பார்க்காமல், குடும்ப உறவுகள் மற்றும் உணர்வுகளுடன் கூடிய பொழுதுபோக்கு படமாக அணுகப்பட்டிருப்பதே படத்தின் தனித்தன்மை.*

*இரண்டாம் பாதி இடைவேலைக்குப் பின் படத்தின் முதல் பாதியின் வேகம் குறைந்தது. மெது...மெது...*

**''கருப்பு'' வெற்றி எதிரொலி**

*சூர்யாவின் முந்தைய படம்: ''கருப்பு'' பெற்ற வெற்றி எதிரொலி, 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்' எதிர்பார்பை உருவாக்கியுள்ளது.*

*"குடும்பத்துடன் பார்க்கக் கூடிய அழகான சூர்யா படம்" இது — பெருவாரியான ரசிகர்களின் குரல்!*





**MANALI PETROCHEMICALS**

**Manali Petrochemicals Limited**
Registered Office: "SPIC House", No. 88, Mount Road, Guindy, Chennai - 600 032.
CIN: L24294TN1986PLC013087
Website: www.manalipetro.com
Telefax: 044 - 2235 1098
E-mail: companysecretary@manalipetro.com

**EXTRACT FROM THE STATEMENT OF FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30.06.2026**

[₹ in Lakh]

| Particulars | Consolidated - Quarter ended 30.06.2026 Unaudited | Quarter ended 31.03.2026 Audited | Quarter ended 30.06.2025 Unaudited | Year ended 31.03.2026 Audited |
|---|---|---|---|---|
| Total Income from operations | 27,472 | 29,266 | 23,467 | 1,02,239 |
| Net Profit for the period (before Tax, Exceptional and Extraordinary Items) | 8,453 | 1,855 | 1,996 | 8,215 |
| Net Profit for the period before Tax (after Exceptional and Extraordinary Items) | 8,453 | 3,709 | 1,996 | 15,045 |
| Net Profit for the period after Tax (after Exceptional and Extraordinary Items) | 6,436 | 2,904 | 1,434 | 12,995 |
| Total Comprehensive Income for the period [Comprising Profit for the period (after Tax) and Other Comprehensive Income (after Tax)] | 6,427 | 6,283 | 1,740 | 19,561 |
| Equity Share Capital (Face value of ₹ 5/- each) | 8,603 | 8,603 | 8,603 | 8,603 |
| Other Equity excluding Revaluation Reserves as at 31st March | | | | 1,19,543 |
| Earnings Per Share (EPS) of ₹ 5/- each (Basic and Diluted) (Not annualised) | 3.74 | 1.69 | 0.83 | 7.56 |

**Note:** 1. Additional information on Standalone Financial Results pursuant to proviso to Reg. 47 (1) (b):

| Particulars | Quarter ended 30.06.2026 Unaudited | Quarter ended 31.03.2026 Audited | Quarter ended 30.06.2025 Unaudited | Year ended 31.03.2026 Audited |
|---|---|---|---|---|
| Total Income from operations | 22,918 | 24,780 | 16,325 | 78,634 |
| Profit Before Tax | 7,286 | 3,274 | 412 | 4,214 |
| Profit After Tax | 5,552 | 2,701 | 302 | 3,477 |
| Total Comprehensive Income | 5,521 | 2,690 | 299 | 3,461 |

2. The figures for quarter ended 31st March 2026 are the balancing figures between audited annual figures in respect of the full financial year and the published year-to-date figures up to the third quarter of the previous financial year.

3. The above is an extract of the detailed format of quarterly results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations & Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results is available in the website of the Company www.manalipetro.com and the websites of the Stock Exchanges.

**NSE URL** - https://www.nseindia.com/get-quotes/equity?symbol=MANALIPETC

**BSE URL** - https://www.bseindia.com/stock-share-price/manali-petrochemical-ltd/manalipetc/500268/

By order of the Board
For Manali Petrochemicals Limited

Place : Chennai
Date : August 13, 2026

R Chandrasekar
*Managing Director & CEO - MPL Group*
*DIN: 06374821*



**Mahindra HOME FINANCE**

**கார்ப்பரேட் அலுவலகம்:** அலகு எண்.203, அமிதி பில்டிங், அகஸ்தியா கார்ப்பரேட் பார்க், கமானி சந்திப்பு, தீயணைப்பு நிலையம் எதிரில், LBS மார்க், கமானி, குர்லா மேற்கு, மும்பை-400070

**பொது அறிவிப்பு**

**கிளை மூடப்படுதல் குறித்து வாடிக்கையாளர் சேவை அறிவிப்பு**

**35A, ஏகாம்பரநாதர் சன்னதி தெரு, ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் மாடியில், காஞ்சிபுரம், தமிழ்நாடு-631502** என்னும் முகவரியில் அமைந்திருந்த மஹிந்திரா ஹோம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் **காஞ்சிபுரம் கிளை** மூடப்பட்டுவிட்டது என்பதையும், அது தற்போது செயல்படவில்லை என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

வீட்டு வசதிக் கடன் தொடர்பான சேவைகள் அல்லது உதவிகள் தேவைப்படும் வாடிக்கையாளர்கள் பின்வரும் முகவரியிலோ அல்லது 1800-233-5333 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்

**பிராந்திய அலுவலகம்:** மஹிந்திரா ஹோம் ஃபைனான்ஸ், முதல் தளம், எண்.128 (பழைய எண்.35), நெல்சன் மாணிக்கம் ரோடு, அமிஞ்சிக்கரை, சென்னை. தமிழ்நாடு-600029 **Email: MRHFL.CC@mahindrahomefinance.com**

ஏற்கனவே உள்ள அனைத்துக் கடன் கணக்குகளும் வாடிக்கையாளர் சேவை ஏற்பாடுகளும் மேற்கூறிய வழிமுறைகள் வாயிலாகத் தடையின்றித் தொடரும்.

இக்கிளைகள் மூடப்படுவதால், வாடிக்கையாளர்கள் மற்றும் MRHFL ஆகியோருக்கிடையிலான கடன் ஒப்பந்தங்களின் கீழ் அவர்களுக்குள்ள உரிமைகளோ அல்லது கடமைகளோ பாதிக்கப்படாது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மஹிந்திரா ரூரல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்



**VISHNUSURYA**

**விஷ்ணுசூர்யா ப்ராஜெக்ட்ஸ் அண்ட் இன்ஃப்ரா லிமிடெட்**

அக்னி பிசினஸ் சென்டர், எண். 24/46, நான்காவது தளம், கே.பி. தாசன் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 600018.

CIN: L63090TN1996PLC035491

**30 ஜூன் 2026–ல் முடிந்த காலாண்டு மற்றும் மூன்று மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | தனியானது: முடிந்த காலாண்டு ஜூன் 30, 2026 (தணிக்கை செய்யாதது) | தனியானது: முடிந்த காலாண்டு மார்ச் 31, 2026 (தணிக்கை செய்தது) | தனியானது: முடிந்த ஆண்டு ஜூன் 30, 2025 (தணிக்கை செய்யாதது) | தனியானது: முடிந்த ஆண்டு மார்ச் 31, 2026 (தணிக்கை செய்தது) | ஒருங்கிணைந்தது: முடிந்த காலாண்டு ஜூன் 30, 2026 (தணிக்கை செய்யாதது) | ஒருங்கிணைந்தது: முடிந்த காலாண்டு மார்ச் 31, 2026 (தணிக்கை செய்தது) | ஒருங்கிணைந்தது: முடிந்த ஆண்டு ஜூன் 30, 2025 (தணிக்கை செய்யாதது) | ஒருங்கிணைந்தது: முடிந்த ஆண்டு மார்ச் 31, 2026 (தணிக்கை செய்தது) |
|---|---|---|---|---|---|---|---|---|
| செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 6186.91 | 12738.10 | 4948.77 | 35172.48 | 6186.91 | 12738.10 | 4948.77 | 35172.49 |
| இதர செயல்பாடுகள் அல்லாத வருமானம் | 47.85 | 476.79 | 42.71 | 618.47 | 31.49 | 475.74 | 42.71 | 595.45 |
| மொத்த வருமானம் | 6234.76 | 13214.89 | 4991.48 | 35790.95 | 6218.40 | 13213.84 | 4991.48 | 35767.93 |
| காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 699.13 | 545.57 | 744.61 | 4532.72 | 747.55 | 565.16 | 744.61 | 4510.71 |
| வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 699.13 | 545.57 | 744.61 | 4532.72 | 747.55 | 565.16 | 744.61 | 4510.71 |
| வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 556.20 | 740.04 | 273.97 | 3540.14 | 591.53 | 800.89 | 273.97 | 3559.39 |
| காலத்திற்கான மொத்த விரிவான வருமானம்(காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்கு பின்) உள்ளடக்கி உள்ளது) | 555.54 | 739.16 | 273.12 | 3537.50 | 590.87 | 800.01 | 273.12 | 3556.75 |
| சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொன்றும் ரூ.10) | 259.26 | 259.26 | 246.10 | 259.26 | 259.26 | 259.26 | 246.10 | 259.26 |
| ஒரு பங்கு சம்பாத்தியம் (ரூ.) (ஒவ்வொன்றும் ரூ.10)★ அடிப்படை மற்றும் பலமிழந்தது (வருடாந்திரம் அல்ல) | 2.14 | 2.98 | 1.11 | 14.25 | 2.28 | 3.22 | 1.11 | 14.33 |

குறிப்பு: 1. மேலே உள்ள தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள், தணிக்கைக் குழுவால் முறையாக மதிப்பாய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, ஆகஸ்ட் 12, 2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. மேலேயுள்ளவை ஜூன் 30, 2026 உடன் முடிவடைந்த காலாண்டிற்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும், இது இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015–ன் விதிமுறை 33–ன் கீழ் பங்குச் சந்தையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜூன் 30, 2026 உடன் முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் பங்குச் சந்தை இணையதளங்களிலும் (www.nse.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்திலும் (https://www.vishnusurya.com/investors/financials) கிடைக்கிறது.

3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், நிறுவனங்கள் சட்டம் 2013–ன் 133–வது பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் இந்தியக் கணக்கியல் தரநிலைகள் விதிகள் 2015–க்கு (IND AS) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

4. செபி (SEBI) பட்டியலிடல் விதிமுறைகளின் விதிமுறை 47–க்கு இணங்க, கீழே கொடுக்கப்பட்டுள்ள க்யூஆர் (QR) குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமும் நிறுவனத்தின் நிதிநிலை முடிவுகளைக் காணலாம் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்:

இயக்குனர்கள் குழுவின் சார்பாக,
**விஷ்ணுசூர்யா ப்ராஜெக்ட்ஸ் அண்ட் இன்ஃப்ரா லிமிடெட்டிற்காக**
ஒப்பம்/–
சோனாலி சாரங்கி
கம்பெனி செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி
உறுப்பினர் எண் : A49480

தேதி: ஆகஸ்ட் 14, 2026
இடம்: சென்னை